சார்பு நீதிமன்றம், இலால்குடி

முன்னிலை:– திருமதி.R.மோகனா, B.L.,

சார்பு நீதிபதி, இலால்குடி.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் நாள் வியாழன்கிழமை

**I.A.No.7/2025 in O.S No.407/2018**

(CNR.No.TNTP180007592017)

S.ராஜசிம்மன் ......மனுதாரர் /வாதி

//எதிர்//

1. சம்பூர்ணம்
2. சந்திரா
3. பூங்கோதை
4. கல்யாணி
5.விஜயசிம்மன்
6. காயத்ரி ....எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 6 பிரதிவாதிகள்
7. ஜெயசிம்மன் ....எதிர்மனுதாரர்/ உத்தேச 7 ஆம் பிரதிவாதி

இம்மனுவானது 27.10.2025 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்பு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.R.வரதராஜன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சுதர்சன் அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சண்முகசுந்தரம் அவர்கள் முன்னிலையாகியும், 7 ஆம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் தோன்றாதரப்பினராகியுள்ள நிலையிலும்,


R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:54:03 +0530

இருதரப்பு வாத உரைகளை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## உத்தரவு

மனுதாரர், தனது மூத்த சகோதரர் ஜெயசிம்மன் என்பவரை இந்த வழக்கில் உத்தேச 7 வது பிரதிவாதியாக சேர்க்க உத்தரவிடக்கோரி கட்டளை 1 வகுமுறை 10(2) மற்றும் உ/இ பிரிவு 151 உரிமையியல் நடைமுறை சட்டத்தின் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுவின் தமிழாக்க சுருக்கம்</u> –

மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி. பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாவா வழக்கினை வாதி தாக்கல் செய்துள்ளார். குடும்ப வம்சாவழி வரைபடம் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் தகப்பனார் மனுதாரரின் தாயார் தனலெட்சுமியை திருமணம் செய்து அவர் மூலமாக மனுதாரரும் சகோதரர் ஜெயசிம்மனும் பிறந்தார்கள். மனுதாரரின் தாயார் இறந்தபிறகு மனுதாரரின் தகப்பனார் அசல் வழக்கு 4 ம் பிரதிவாதி கல்யாணி என்பவரை திருமணம் செய்து கொண்டு அவர் மூலம் அசல் வழக்கு 5, 6 பிரதிவாதிகள் பிறந்தார்கள். தாவா வழக்கை அவ எண் 1373/2017 என்ற எண்ணில் வாதி திருச்சி முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பின்னிட்டு ஆள்வரை அதிகார வரம்பின்பேரில் சமூகம் நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றம் செய்யப்பட்டு அவ எண் 407/2018 என்ற எண்ணில் வழக்கு நிலுவையில் உள்ளது. தாவா வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வாதியின் சகோதரர் ஜெயசிம்மன் எங்குள்ளார் என்று தெரியாமல்



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:54:11 +0530

இருந்ததால் அவரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் விடுபட்டுள்ளது. அதனை பற்றி வழக்குரை பாரா 5 ல் மனுதாரர் /வாதி கூறியுள்ளார். 22.11.2022 ஆம் தேதி மனுதாரர்/வாதி வாசா1 ஆக அளித்துள்ள சாட்சிய விசாரணை 3 வது பக்கத்தில் பின்வருமாறு சாட்சியம் அளித்துள்ளார்.

"அசல் வழக்கு எண்.84/2021 சொத்துக்களை எனது அண்ணன் ஜெயசிம்மன், வேலாயுதம் என்பவரிடமிருந்து வாங்கினார். அவர் 13 வருடங்களான காணாமல் போய்விட்டார். அவர் இறந்ததாக நான் சொல்லவில்லை திரும்பி வருவார் என்று நம்புகிறேன்"

ஆகையால், மேற்படி ஜெயசிம்மன் என்றாவது ஒருநாள் வந்துவிடுவார் என்று இன்று வரை நம்பி வருகிறார். மனுதாரரும் அவரது உறவினர்களும் மனுதாரரின் சகோதரர் ஜெயசிம்மன் இறந்துவிட்டதாக இன்றளவும் கேள்விப்படவில்லை. உண்மையில் மனுதாரரின் மூத்த சகோதரர் ஜெயசிம்மன் அசல் வழக்கில் அவசிய தரப்பினராக சேர்க்க வேண்டியுள்ளது. வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் ஜெயசிம்மன் எங்குள்ளார் என்பதில் பல குழப்பங்கள் இருந்ததால் அவரை வழக்கில் தரப்பினராக காட்டாமல் மனுதாரர் விட்டு விட்டார். தற்போது அவர் வழக்கில் அவசிய தரப்பினராக சேர்ப்பதற்கான அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதால் மனுதாரர் ஜெயசிம்மனை வழக்கில் 7 ஆம் பிரதிவாதியாக சேர்ப்பதற்காக தாவா மனுவினை தாக்கல் செய்துள்ளார். வழக்கில் நுதனமான குறைகளை சரிசெய்வதற்காக காணாமல் போன மனுதாரரின் மூத்த சகோதரர் இவ்வழக்கிற்கு தேவையான மற்றும் அவசியமான தரப்பினர் ஆவார். அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்க அனுமதிக்கவில்லை என்றால் மனுதாரருக்கு பேரிழப்பு ஏற்படும் என்பதால்



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:54:18 +0530

மனுவினை அனுமதித்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல்.

3. <u>3 முதல் 5 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு எதிர்மனுவுரையின் சுருக்கம் –</u>

மனுதாரர் தனது மனுவில் மனுவுடன் கூடிய சத்தியபிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானது ஆகும். மனுதாரரின் மனுவில், அவரது உடன் பிறந்த சகோதரர் ஜெயசிம்மன் என்பவரை ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனு செய்துள்ளது, நிலைக்கத்தக்கது அல்ல. அசல் வழக்கில் தற்போது ஜெயசிம்மன் அவர்களை தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று கோருகின்ற இந்த மனுதாரர், அசல் வழக்கு தாக்கல் செய்யும் சமயம், தனது சகோதரர் ஜெயசிம்மன் அவர்கள் எங்கு உள்ளார் என்று தெரியவில்லை என தனது வழக்குரையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி அசல் வழக்கானது 2018 ஆம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் இரு தரப்பினரிடமும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, இரு தரப்பினர் வாதமும் முடிக்கப்பட்டு தற்போது அசல் வழக்கானது தீர்ப்புக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்த நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் தனது அசல் வழக்குரையில் தனது சகோதரராகிய ஜெயசிம்மன் பத்தாண்டுகளாக காணாமல் போய்விட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில் பார்க்கும்பொழுது மேற்படி ஜெயசிம்மன் அவர்கள் காணாமல் போய்விட்டதாக வாதியே குறிப்பிடுகின்ற வகையில் பார்த்தால் மேற்படி ஜெயசிம்மன் அவர்கள் தொலைந்து போய் 17 ஆண்டுகள் ஆகிவிட்டது. சட்ட நடைமுறைப்படி ஒரு நபர் தொலைந்து, ஏழு வருடங்கள் எங்கிருக்கிறார் என்பதே தெரியாமல் ஆகிவிட்டது என்றால் அவர் (civil death) சட்டப்படி



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:54:25 +0530

இறந்து விட்டார் என்று எடுத்துக்கொள்ளவேண்டும்.

**3.1** மேலும் அசல் வழக்கு எண்.84/2021 என்ற வழக்கில் இந்த மனுதாரர் பிரதிவாதியாவார். அவர் அந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் சமயம் தனது சகோதரர் ஜெயசிம்மன் காணாமல் போய்விட்டார் என அதில் ஒப்புக்கொண்டுள்ளார். அந்த வழக்கில் 84/2021 ல் கண்டுள்ள சொத்தானது, ஜெயசிம்மன் என்பவரின் சொந்த சொத்து என்றும் அவருக்குப் பின் இம்மனுவின் மனுதாரரே உரிமையாளர் என்றும் அசல் வழக்கு எண். 84/2021ல் வாதிகளுக்கு எந்த பாக உரிமையும் இல்லை எனவும் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். ஆக யாரை தரப்பினராக சேர்க்க வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளாரோ, அவர் இறந்து விட்டதாகவே எண்ணி அசல் வழக்கு எண் 84/21 வழக்கில் உள்ள சொத்திற்கு தானே முழு உரிமையாளர் என தெளிவாக மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ளார். அதனால் தரப்பினராக சேர்க்க வேண்டிய நபர் உயிருடன் இல்லை என்பது தெளிவாக தெரிய வந்துள்ளது. அதனால் இற்நத நபரை ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல.

**3.2** மேலும் மனுதாரர் அ.வ.எண்.407/2018 மற்றும் அவ.எண்.84/2021 என்ற வழக்கிலும் ஜெயசிம்மன் என்பவர் சுமார் 13 ஆண்டுகளுக்கும் மேலாக எங்கு உள்ளார் என்பது பற்றி தெரியவில்லை என்று ஒப்புக்கொண்டும், அதனால் அவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்று ஒப்புக்கொண்டும் இருந்துவிட்டு, தற்போது இந்த வழக்கு முடிவு பெறும் சமயத்தில் காணாமல் போன சகோதரர் இருப்பதாகவும, அவருக்கு ஒரு விலாசத்தை குறிப்பிட்டு அவரை தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளது



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:54:32 +0530

ஏற்கதகுந்த ஒன்றல்ல, சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. மனுதாரர் தன் மனுவில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் இல்லாத ஒரு நபரை குறிப்பிட்டு அவரை தரப்பினராக சேர்க்க வேண்டும் என மனு தாக்கல் செய்வதற்கு நீதிமன்றம் மூலம் அறிவிப்பு அனுப்ப வேண்டும் என கோரி அதற்கு ஏற்பாடு செய்துள்ளார். இந்த செயலானது முடிவடைய உள்ள இந்த வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தை தவிர வேறு எதுவும் இல்லை, இல்லாத ஒரு விலாசத்தை குறிப்பிட்டு அறிவிப்பி அனுப்பினால் அது சார்வு ஆகாது என்ற எண்ணத்திலும் வழக்கை நீண்ட காலமாக நிலுவையில் வைத்திருக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் இந்தமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.3** இந்த மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யும் சமயத்தில் தனது சகோதரர் ஜெயசிம்மன் காணாமல் போய்விட்டார் என ஒப்புக்கொண்டு, அதற்காக மனுதாரரின் தந்தை காவல்துறையில் புகார் கொடுத்தார் என்றும் அதற்காக மிஸ்ஸிங் சர்டிபிகேட் சான்றிதழ் தரவில்லை என்றும் ஒப்புக்கொண்டு விட்டு தற்போது ஏதோ ஒரு முகவரியை குறிப்பிட்டு அதில் உள்ள நபரை தரப்பினராக சேர்க்க வேண்டும் என, மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளது, எந்த விதத்திலும் நியாயமானது அல்ல, சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல.

**3.4** மேலும், ஏறத்தாழ 17 ஆண்டுகளுக்கு முன்பு காணாமல் போனவர் எப்படி மேற்படி விலசாத்தில் இருப்பார் என்று எதன் அடிப்படையில் விலாசத்தை குறிப்பிட்டு இந்த மனுதாரர் மேற்படி மனுவை தாக்கல் செய்து உள்ளார் என்பதை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். அசல்


R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:54:39 +0530

வழக்கானது சாட்சியங்கள் கூண்டில் ஏற்றப்பட்டு வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டு முடிவுக்கு வந்து தீர்ப்பு கூறுகின்ற சமயத்தில் வேண்டும் என்று இது போன்ற மனுவை தாக்கல் செய்து தரப்பினரை சேர்க்க வேண்டும் என மனு தாக்கல் செய்வது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. ஆகவே நீதிமன்றம் மனுதாரர்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்மனுவுரை தாக்கல்.

4. தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனை – மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா ?

5. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் எதுவும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

6. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில், அசல் வழக்கானது மனுதாரரின் தாத்தாவிற்கு பாகமாக பிரிவினை செய்த சொத்துக்களில் மனுதாரரின் இறந்துபோ தகப்பனாருக்கு உரிய பாகத்திற்கு பாகப்பிரிவினை பரிகார வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரரின் தகப்பனாருக்கு தனலெட்சுமி என்ற மனைவி மூலம் மனுதாரரும் ஜெயசிம்மன் என்ற இரண்டு மகன்கள் வாரிசுகளாக உள்ளதாகவும் தனலெட்சுமி இறந்தபின்பு மனுதாரின் தகப்பனார் 4ம் பிரதிவாதியான கல்யாணி என்பவரை திருமணம் செய்து கொண்டதில் அவர் மூலம் 5, 6ம் பிரதிவாதிகள் வாரிசுகளாக உள்ளதாகவும் மனுதாரரின் உடன்பிறந்த சகோதரர் ஜெயசிம்மன் பல ஆண்டுகாலமாக காணாமல் போய்விட்டதால் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் எங்குள்ளார் என்பது தெரியாமல் இருந்ததால் அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்க



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:54:46 +0530

நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் இருதரப்பு சாட்சிகள் முடிவடைந்து இருதரப்பு வாதங்கள் முடிவடைந்த நிலையில் அனைத்து வாரிசுகளும் அவசிய தரப்பினர்கள் என்பதால் அவர்களை வழக்கில் சேர்ப்பது அவசியமானது என்ற அறிவுறுத்தலின் பேரில் தாவா வழக்கில் அவரை தரப்பினராக சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் நூதன நடைமுறைகளால் வழக்கு பாதிக்கப்படக்கூடாது என்பதாலும் மனுதாரரின் சகோதரர் ஜெயசிம்மன் உயிருடன் இருப்பதாக மனுதாரர் தற்போது வரை நம்பி வருகிறார் என்பதாலும் அவரை வழக்கில் தரப்பினராக சேர்ப்பதால் எவ்வித பாதக நிலையும் பாகப்பிரிவினை வழக்கில் எதிர்தரப்பினர்களுக்கு ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும் சட்ட நுணுக்களை பின்பற்றும் வகையில் வாதி தாவா வழக்கில் அவரது காணாமல் போன ஜெயசிம்மனை அவசிய மற்றும் தகுந்த தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமானது என்பதால் மனுவினை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டது.

7. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுவினை அனுமதிப்பதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள வம்சாவழியில் கூறியுள்ள உறவுமுறைகள் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்ற போதிலும் மனுதாரரின் சகோதரர் ஜெயசிம்மன் கடந்த 13 வருட காலமாக காணாமல் போய்விட்டார் என்பதை மனுதாரர் 2017 ஆம் வருடம் தாக்கல் செய்த வழக்குரையில் ஒப்புக்கொண்டும் தற்போது வரை எங்குள்ளார் என தெரியாது என சாட்சியத்தில் ஒப்புக்கொண்டதிலிருந்தே மேற்படி ஜெயசிம்மன் கடந்த 17 வருட காலமாக காணாமல் போய்விட்டார்



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:54:54 +0530

என்பது ஊர்ஜிதமாகிறது என்றும் பொதுவாக 7 வருடகாலமாக ஒருவர் காணாமல் போய் கண்டுபிடிக்க முடியவில்லை என்றாலே அவர் இறந்துவிட்டதாக சட்டப்படி அனுமானிக்க முடிகிறது என்ற நிலையில் அவர் வசிக்கும் முகவரி ஒன்றை குறிப்பிட்டு இல்லாத நபரின் முகவரிக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு அவரை வழக்கில் இருப்பதுபோல் காட்டுவது சட்டவிதிகளின் படி ஏற்புடையதல்ல என்றும் மேற்படி மனுதாரரின் சகோதரர் ஜெயசிம்மன் பெயரில் கிரையம் பெற்ற சொத்திற்காக மற்றொரு தாவா வழக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கோரி நிலுவையில் உள்ளதாகவும் அந்த சொத்தினை மனுதாரர் அவரது வசம் வைத்துகொண்டு இந்த பிரதிவாதிகள் குடியிருக்கும் வீட்டை பாகம்பிரிக்க வேண்டும் என்று கூறி தற்போதைய தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்படி அவ எண் 84/21 வழக்கில் இந்த பிரதிவாதிகளுக்கு எவ்வித தகுந்த பலன்களும் கிடைத்துவிடக்கூடாது என்பதற்காகவும் அசல் வழக்கில் இல்லாத நபருக்கு பாகம் பெற்று அதனை பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் இருதரப்பு சாட்சிகள் மற்றும் வாதவுரைகள் முடிவடைந்த பின்பு மீண்டும் வழக்கினை மேலும் காலதாமப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடனும் தற்போதைய தாவா மனுவினை எவ்வித தகுந்த முகாந்திரமும் இல்லாமல் தாக்கல் செய்துள்ளதால் தற்போதைய தாவா மனு தள்ளுபடி செய்யதக்கது என வாதிடப்பட்டது.

8. அசல் வழக்கு மனுதாரர் /வாதியின் தாத்தா இராமைய்யாவின் பாகத்திற்கு பிரிந்த சொத்துக்களில் அவரது வாரிசுகளுக்கிடையே பாகப்பிரிவினை பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் தாவா வழக்கு தாக்கல்



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:55:02 +0530

செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதியின் குடும்ப வம்சாவழி விபர பட்டியல் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளின் உறவுமுறைகள் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

**9**. மனுதாரர்/வாதியின் தாயார் தனலெட்சுமி மூலமாக மனுதாரரின் தகப்பனாருக்கு வாதியும் அவரது உடன்பிறந்த சகோதரர் ஜெயசிம்மனும் பிறந்துள்ளார்கள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரரின் தகப்பனார் அவரது முதல் மனைவி தனலெட்சுமி இறந்த பின்பு 4ம் பிரதிவாதியை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டுள்ளார். அவர் மூலம் 5, 6ஆம் பிரதிவாதிகள் வாரிசுகளாக உள்ளார்கள்.

**10**. மனுதாரரின் தகப்பனாருக்கு மனுதாரரும் ஜெயசிம்மனும் 4 முதல் 6 பிரதிவாதிகளும் சட்டப்படியான வாரிசுகளாக இருக்கிறார்கள் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரரின் உடன்பிறந்த சகோதரர் ஜெயசிம்மன் வழக்கு தாக்கல் செய்யும் காலத்திற்கு முன்பே காணாமல் போய்விட்டார் என்பது வழக்குரையில் மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி வா.சா.1 ஆக அளித்துள்ள சாட்சியத்திலும் அவரது சகோதரர் ஜெயசிம்மன் எங்குள்ளார் என்று தெரியவில்லை ஆனால் அவர் இறக்கவில்லை என்றும் என்றாவது ஒருநாள் திரும்பி வருவார் என்றும் கூறியுள்ளார்.

**11.** மேற்படி ஜெயசிம்மன் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் அவரது தகப்பனாரால் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்பதால் அந்த சொத்துக்களும் பொதுக்குடும்ப சொத்துக்கள் என்று கூறி 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் வாதம் எடுத்துரைத்து அந்த சொத்துக்களில் சரிசம பாக



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:55:09 +0530

உரிமை கேட்டு வழக்கு அவ எண் 84/21 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சனையாக இருப்பது மேற்படி ஜெயசிம்மன் பெயரில் கிரையம் வாங்கிய சொத்துக்கள் அவரது தனிப்பட்ட சொத்துக்களா அல்லது பொதுக்குடும்ப சொத்துக்களா என்பதே ஆகும்,.

**12**. மேற்படி ஜெயசிம்மன் உயிருடன் இருந்தாலும் கூட மேற்படி சொத்துக்கள் பொதுக்குடும்ப சொத்துக்கள் என்று வழக்கின் மேற்படி 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யும் பட்சத்தில் அ.வ. எண். 84/2021 வழக்கில் கோரியுள்ள பரிகாரம் குறித்து தகுந்த தீர்வினை 4 முதல் 6 பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13**. தற்போதைய மனுவில் கூறியுள்ளபடி ஜெயசிம்மன் காணாமல் போய்விட்டார் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்ற போதிலும் அவர் இந்து கூட்டுகுடும்ப உறுப்பினர் என்பதாலும் அவர் இறந்து விட்டதற்கான அறுதி சான்று இல்லை என்பதாலும் மேற்படி நபர் தற்போதைய பாகப்பிரிவினை வழக்கில் அவசிய தரப்பினராகவே கருதப்படுவார்.

**14**. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் மேற்படி ஜெயசிம்மன் காணாமல் போய்விட்டார் என்ற போதிலும் காணாமல் போன தேதிக்கு முன்பு கடைசியாக எங்கு குடியிருந்தாரோ அந்த முகவரியை குறிப்பிட்டு வழக்கில் அவரது பாகத்தினை பொறுத்து பாகபிரிவினை பரிகாரம் கோரும் பட்சத்தில் மட்டுமே அவரது பாக உரிமை நிலையை பொறுத்து தீர்வு காண முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி நபருக்கான பாகத்தினை பொறுத்து



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:55:17 +0530

வழக்கில் கூறியுள்ள நிலையில் அவரை தரப்பினராக சேர்க்காமல் அது குறித்து தீர்வு பெற இயலாது என்பதால் மேற்படி உத்தேச தரப்பினர் அவசிய தரப்பினர் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**15**. மேற்படி ஜெயசிம்மன் காணாமல் போய்விட்டதாக இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்பதாலும் பிரிவு 108 இந்திய சாட்சிய சட்டவிதிகளின்படி ஜெயசிம்மனின் நிலையை பற்றி தீர்வு காண வேண்டியுள்ளது என்பதாலும் மேற்படி ஜெயசிம்மனை வழக்கில் தரப்பினராக சேர்ப்பதற்கு அனுமதியளிப்பதால் மட்டுமே தற்போதைய அசல் வழக்கில் இருதரப்பினர்களுக்கும் சொத்தில் உள்ள உரிமை மற்றும் நலன் எந்த வகையிலும் பாதிக்கப்படபோவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அ.வ. எண். 84/21 வழக்கின் வாதிகள் தரப்பில் கோரியுள்ள கோரிக்கைக்கு எந்த வகையிலும் பாதகம் ஏற்பட வாய்ப்பில்லை என்றே இந்நீதிமன்றம் கருகிறது.

**16**. பாகப்பிரிவினை பரிகார வழக்கில் அனைத்து வாரிசுகளையும் வழக்கில் தரப்பினராக சேர்த்து அவர்களின் பாக உரிமையை பற்றி தீர்வு பெற வேண்டியுள்ளது என்பதாலும் மேற்படி நபர் உயிருடன் இருந்தாலும் கூட அவரது பெயரில் அவரது தகப்பனார் பெயரளவில் கிரையம் பெற்றுள்ளதாக கூறும் அவ எண் 84/21 வழக்கின் வாதிகளின் வாதத்தினை பொறுத்து அந்த வழக்கில் தீர்வு பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது என்பதாலும் தற்போதைய மனுவினை அனுமதிப்பதால் அவ எண் 84/21 வழக்கின் தன்மை எந்த வகையிலும் மாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை என்பதால் தற்போதைய மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்த மனுவில் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.


R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:55:24 +0530

**இறுதியாக**, மனு அனுமதிக்கப்படுகிறது. உத்தேச தரப்பினரை வழக்கில் 7 ஆம் பிரதிவாதியாக சேர்க்க அனுமதியளித்து மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று **2025 ம் வருடம் நவம்பர் மாதம் 6 ஆம் நாள்** அவையறிய பகரப்பட்டது.

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:55:31 +0530

சார்பு நீதிபதி,
இலால்குடி.

**சான்றாவணங்களின் பட்டியல்**

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் –

இல்லை.

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.07 10:55:37 +0530

சார்பு நீதிபதி,
இலால்குடி.

Subordinate Court Lalgudi

**I.A.No.7/2025 in O.S.No.407/2018**

Draft / Fair Order

**Date – 06.11.2025**